# மாஸ்கோவில் மாசே துங்: சியாங் கும்பல்

# தத்தளிப்பு!

## ஆசியா முழுதும் சோவியத் மயமாகுமேயென அலறல்!

## ரஷ்யாவிலிருந்து சீனவுக்கு 50,000 ரகசிய 'ஏஜெண்டுகள்'

Phone No. 4502
விலை அணு ஒன்று]
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.
MALAI MANI
( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (11—1—50) வெளியூர் (12—1—50) [இதழ் 140

## தென்கிழக்கு ஆசியாவில் உலகப் பெரும்புரட்சிக்குத் திட்டமென ஓலம்!

சீனக் கம்யூனிஸ்டு தலைவர் மாசேதுங்கும், பிரதமர் ஜோசப் ஸ்டாலினும் சேர்ந்திருந்து மாபெருந்திட்டமொன்றை உருவாக்கி வருகின்றனரென்றும், ஆசியா முழுவதையும் சோவியத் மயமயச்கு தே அத்திட்டமாகுமென்றும் தேசிய சர்க்காருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக பார்மோஸாவிலுள்ள பிரதமர் பென்ஹ்ஸி—ஷான் ஜனவரி 8-ந் தேதியன்று குறிப்பிட்டிருக்கிறார். சீனத் தலைவர் மாசேதுங் மாஸ்கோவில் டிசம்பர் 26-ந் தேதிமுதல் தங்கி வருகிறார்.

சீனக் கம்யூனிஸ்டு தலைநகர் பீகிங்கிலிருந்து இரகசிய முறையில் கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜுகள் தனது கூற்றுக்குச் சான்றாகத் திகழ்கின்றன வென்று பிரதமர் யென் மேலும் தெரிவித்தார். தூரகிழக்கு நாடுகள் அத்தனைமீதும் சோவியத் ஆதிக்கத்தைத் திணிக்க கம்யூனிஸ்டு தலைவர்களிருவரும் இரகசிய ஏற்பாடுகள் புரிந்து வருகின்றனரென அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் யென்ஹ்ஸி-ஷான் மத்திய சீனாவில் முன்னாள் போர்ப்படைத் தலைவராவார். சீனப் பெருநிலத்தை சோவியத் மயமாக்கவும், கிழக்கோடி நாடுகளில் கம்யூனிஸ்டுகள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் இடங்களிலெல்லாம் இராணுவ உதவியளிக்கவும், இந்தியா போன்ற நாடுகளில் இரகசியமாக நாச வேலைகள் நடைபெறுவதற்கான ஊக்கமளிக்கவும் ரஷ்யா பின்வாங்காதென பிரதமர் யென் குறிப்பிட்டார். சீனவுக்கு 50,000 இரகசிய ஏஜண்டுகளை அனுப்பியுதவுமாறு மாசே-துங் ஸ்டாலினைக் கேட்டுக்கொண்டுள்ளாரென்றும் 15 000 பேர் இவர்களுடன் இராணுவ போதனைகளை வைத்துக்கொள்ளப்படுவரென்றும், 10 000 பேர் சர்வதேசக் கம்யூனிஸ்டுகளுடனும் ஸ்தாபனங்களுடனும் தொடர்பேற்படுத்திக் கொள்ள பயன்படுத்திக் கொள்ளப்படுவாரென்றும், மிகுதிபேர் சீனாவிலுள்ள பிரிட்டிஷ் அமெரிக்க மார்க்கெட்களைக் கைப்பற்றும் பெரும் பணிக்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் பெறுவரென்றும் பிரதமர் யென் தெரிவித்தார்.

"கம்யூனிஸ்டுப் பெருந் தலைவர்களின் இத்திட்டத்தின் குறிக்கோள் தென்கிழக்கு ஆசியாவில் உலகப் புரட்சியொன்றினையேற்படுத்துவதேயாகும். மூன்றாவது உலகப் போர் ஒன்றைத் துவக்குவதின் மூலம் இவர்கள் இப்புரட்சியைச் செய்யப் போவதில்லை. சிறுகச் சிறுக சோவியத் மயமாக்கும் முயற்சியிலீடுபட்டு, இந்தோ சீனா, மலேயா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைக் கவர்வதே இவர்கள் திட்டம்" என்று தேசிய சர்க்கார் பிரதமர் யென்ஹ்ஸி-ஷான் இறுதியாகக் குறிப்பிட்டார்.

## சோவியத் விஞ்ஞானிகளின் வானநூற் புலமை

### புதுக் கிரகங்கள் மூன்று கண்டுபிடிப்பு

லண்டன், ஜன. 10—

மூன்று புதுக் கிரகங்களை சோவியத் வானநூற் கலைஞர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இவை செவ்வாய்க் கிரகத்திற்கும் புதன் கிரகத்திற்குமிடையே உள்ள கதிகளில் சுற்றிவருகின்றனவாம். இவைகளுக்கு அவர்கள் 'மாஸ்கோ' 'ரஷ்யா' 'கொம்ஸோமாலியா' என்ற பெயர்களை வைத்திருக்கின்றனராம்.

இதுவரை சோவியத் வானநூல் அறிஞர்கள் 113 சிறு கிரகங்களைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## போலந்திலிருந்து ஜெர்மானியர் வெளியேற்றம்

பெர்லின், ஜன. 10—

போலந்திலிருந்து குறைந்தது இரண்டரைலட்சம் ஜெர்மானியர் மேற்கு ஜெர்மனிக்கு வருவது இம்மாதம் ஆரம்பமாகும் என்று தெரிகிறது. ஜனவரியில் மட்டும் 45000 பேர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

# "வெள்ளிக்காசுகளுக்காக ஆத்மாவைப் பரிவர்த்தனை செய்கிறது பிரிட்டன்"!

## திருமதி சியாங்கின் தீராத சீற்றம்!

———:(0):———

### தேசியப் படைகள் இன்னும் தோற்கடிக்கப்படவில்லையாம்!

சீனக் கம்யூனிஸ்ட் ஆட்சியை அங்கீகரித்ததின்மூலம் ஒரு சில வெள்ளிக்காசுகளுக்காக பிரிட்டன் தனது ஆத்மாவையே பரிவர்த்தனை செய்து விட்டதென திருமதி சியாங்கேஷேக் நியூயார்க்கில் ஜன. 8-ந்தேதியன்று குறிப்பிட்டார். ஒரு நாளைக்கு விடுதலைப் போர்க்களத்தில் இவ்வெள்ளிக்காசுகள் பிரிட்டிஷ் இரத்தம், வியர்வை, கண்ணீரில் வட்டியக்குமென்பது உறுதியென அவர் வானொலிப் பேச்சில் குறிப்பிட்டார். 'ஆத்மார்த்தத்தில் தவறெனப்படுவது, அரசியலில் சரியாகப் போய்விடாது!

கம்யூனிஸ்ட் படையினரை எதிர்த்து தேசிய சீனா சாகும் வரை போராடியே தீருமென அவர் மேலுங் குறிப்பிட்டார்.

யு. எஸ். நாட்டுக்களித்த இவ்வுறுதி நன்றி கூறும் பேச்சில் திருமதி சியாங் குறிப்பிட்டார், 'பார்மோஸாத் தீவிலிருந்து எனது கணவர் இறுதி வரைப் போராடியே தீருவார்' என்று.

பார்மோஸாவில் தனது கணவனிடம் சென்று தங்க திருமதி சியாங் இவ்வாரத்தில் அமெரிக்காவை விட்டுப் புறப்படுகிறார்.

'கம்யூனிஸ்ட் சீனாவை பிரிட்டன் அங்கீகரித்தது வெட்கரமானதாகும். சீனா என்றைக்கும் ரஷ்யாவுக்குச் சொந்தமாகப் போவதில்லை. சீனா சுதந்தரநாடாகவே திகழப்போவது உறுதி' என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

"அமெரிக்காவின் உதவி கொண்டோ, அல்லாமலோ, எங்களால் போராட முடியும். நாங்கள் தோற்றுப்போய்விடவில்லை. எங்கள் மக்கள் லட்சக் கணக்கானவர் இன்னும் எங்கள் பக்கமேயிருந்து போராடிவருகின்றனர்"

திருமதி சியாங் மேலும்

## தஞ்சை—மன்னார்குடி பஸ் சர்விஸ்

——

தஞ்சைக்கும் மன்னார்குடிக்குமிடையே வடுவூர் கிராமத்தின் மேல் செல்லும் குறுக்குப் பாதையில் (22 மைல் நீளம்) பஸ் சர்விஸொன்று புதிதாக விடப்பட்டிருக்கிறது. இதுவரை வடுவூர் வாசிகள் 7 மைல் தூரம் நடந்தோ அல்லது வண்டியில் வந்தோ தான் அம்மாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனை அடைய முடியும். இந்த சர்விஸால் இந்த இடர் தீர்ந்துவிடுகிறது.

## முடியாத காரியத்தை செய்து முடிக்க மும்முரம்

### காமன்வெல்த் மாநாடு பற்றி 'பிராவ்தா'

லண்டன், ஜன 10—

ஆசியநாடுகளின் சுதந்திர இயக்கங்களை ஒடுக்கவே கொழும்பு மாநாடு ஆயத்தம் செய்கிறதென்று மாஸ்கோ பத்திரிகையான 'பிராவ்தா' கூறுகிறது. லண்டனிலுள்ள கம்யூனிஸ்ட் பத்திரிகையான டெய்லிவொர்க்கர் எழுதுகையில் கம்யூனிஸத்தை ஒடுக்குவது என்பது சாத்தியமற்ற காரியம் என்றும். அந்த முடியாத காரியத்தைச் செய்து முடிக்க கொழும்பு மாநாடு திட்டம் போடுகிறது என்றும் எழுதியிருக்கிறது.

## இருட்டறையிலுள்ள இரகசியத் தங்கம் வெளிவருகிறது!

———:(0):———

### செயற்கைத் தங்கம் செய்வதில் வெற்றி

நியூயார்க், ஜன. 10—

சாதா உலோகங்களைத் தங்கமாக மாற்றவேண்டும் என்று இரசவாதிகள் முன்பு கனவு கண்டது இப்பொழுது அணு சக்தி விஞ்ஞானிகளால் சாத்தியம்தான் என்பது கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது.

செயற்கைத் தங்கம் செய்யப்படுகிறது என்ற செய்தி வெளியானவுடனேயே உண்மைத் தங்கத்தை பதுக்கியவர்கள் அவைகளை வெளிகொண்டுவர ஆரம்பித்திருக்கின்றனர். இந்தியா, எகிப்த், வட ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் தங்கத்தை ஏராளமாக விலைக்கு விற்க பலர்

தெரிவித்ததாவது:

விடுதலைக்கும் பொதுவுடைமைக்குமிடையே இன்றைய உலகம் பிளவுண்டு கிடக்கிறது.

'நன்மைக்கும் தீமைக்கும் நடைபெறும் பெரும்போராட்டத்திலேயே சீனா இன்று ஈடுபட்டு நிற்கிறது.

சென்றிருப்பதாகவும் தெரிகிறது.

செயற்கைத் தங்கம் தயாரிப்பதற்கு ஆகும் செலவு உண்மைத் தங்கத்திற்காகும் செலவைவிடப் பன்மடங்காகும்.

### 'ரேடியோ ஆக்டிவ்' தன்மை உள்ளதாம்

நியூயார்க்கில் சென்ற 4 மாதங்களாக தங்கம் விலை குறைவதற்கு காரணம், இந்த செயற்கைத் தங்கம் உற்பத்திதான் என்று தெரியவருகிறது.

செயற்கைத் தங்கம் அணுசக்திமூலம் செய்யப்படுவதால் ரேடியோ ஆக்டிவ்' தன்மை அதற்கிருப்பதாகவும் இதை உபயோகிப்பது ஆபத்து என்றும் கூறப்படுகிறது.

———

திருவாங்கூர் கோட்டாறு மிஷன் மடத்தில் சேவைசெய்ய 25 வயது பெல்ஜிய பாதிரி ஒருவர் வருகிறார். இவர் தமிழ் கற்றுக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்.

—ஜூனே ப

# மாலை மணி

சென்னை 11—1—50 புதன்கிழமை


# இலங்கை நாடகம்!

இலங்கையில் காமன்வெல்த் நாடகம் ஆரம்பமாகிவிட்டது! நடிகர்கள் அனைவரும் வந்து சேர்ந்துவிட்டனர்! இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பிரிட்டன், கனடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகள் பிரதான வேடங்கள் தாங்கி நிற்கின்றன! இந்தியா படாடோப உடையுடன் காட்சியளிக்கிறது! உடையில் பளபளப்பு இருக்கும் அளவுக்கு உரையில் பளபளப்பு இருக்கும்படி பாடம் கொடுக்கப்பட்டிருக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது! உலக அரசியல் அரங்கங்களெல்லாம் நாடகத்தைக்கண்டு கொண்டிருக்கின்றன! நாடகத்திற்கான முன்னேற்பாடுகளையும், நடைமுறை நிகழ்ச்சிகளையும் காணும்போது, ஆட்டிப்படைக்கும் அதிகாரம் படைத்த பாகத்தை பிரிட்டன் ஏற்றிருக்கிறது என்பது மட்டும் தெளிவாக விளங்குகிறது!

இலங்கையில், காமன்வெல்த் நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் கூடியிருப்பதற்கு, அடிப்படைக் காரணமாக—முக்கிய காரணமாகத் தென்படுவது, தென் கிழக்கு ஆசியா பகுதியில் கம்யூனிசத்தைத் தடுக்க வேண்டிய வழிகளைக் காணுவதற்கேயாகும் என்பது, மாநாட்டினரை வரவேற்றுப் பேசிய இலங்கைப் பிரதமரின் வாக்கிலிருந்து தெரியவருகிறது.

கம்யூனிசத்தைத் தடுக்க மாநாடு கூட்டியுள்ளனர்; அதில் இந்தியாவும் கலந்து கொண்டுள்ளது! கம்யூனிஸம் ஏன் பரவுகிறது? ஏன் அது தடுக்கப்படவேண்டும்? தடுக்கப்படவேண்டிய அளவுக்கு அது மனித சமுதாயத்திற்கு இழைத்து வரும் கொடுமைதான் என்ன? கம்யூனிசம் மக்களை வாழவைத்து வந்துள்ளதா அல்லது மாளவைத்து வந்துள்ளதா? என்பதைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு அந்த மாநாட்டில் இடமளிக்கப்பட்டதாகவோ, அளிக்கப்படப் போவதாகவோ தெரியவில்லை. கம்யூனிஸம் எதிர்க்கப்படவேண்டும், தடுக்கப்படவேண்டும் அவ்வளவுதான்! ஏக ஆதிபத்தியத்தின் மீது கொண்டுள்ள பக்தியுணர்ச்சி, கம்யூனிசத்தின் மீது வெறுப்புணர்ச்சியைத் தெளிக்கச் செய்கிறது! கம்யூனிஸத்தின் மீது எதிர்ப்பு வெறுப்புணர்ச்சியின் விளைவேயல்லாமல் விவேகத்தின் விளைவாகத் தென்படவில்லை.

கம்யூனிசம்—வறுமையை மாய்க்கும் நல்ல மருந்து என உலகத்தின் ஏழை எளியவர்கள் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டு, அதனால் நல்லபலனும் கண்டு வருகிறார்கள். எங்கெங்கு வறுமை-பசி-பட்டினி காணப்படுகிறதோ; அங்கெல்லாம் உள்ள மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் உற்றத் தோழனாக ஆகிவிடுகிறது கம்யூனிசம். கம்யூனிசம் உலகத்தின் பெரும்பாலவரான பாட்டாளிகளைத் தோழமைக்கொள்வது, ஆதிபத்திய மனப்பான்மை கொண்ட நாட்டின் அதிபதிகளுக்குப் பிடிக்கவில்லை என்றால், என்னசெய்ய வேண்டும்? வறுமையைப் போக்கும் மாற்றுமருந்தையல்லவா கொடுக்கவேண்டும்! அப்படி என்ன மாற்று மருந்தை வைத்திருக்கிறார்கள் இலங்கையில் கூடிடுவோர்; அல்லது என்ன மாற்று மருந்தைத்தான் அவர்கள் கண்டுபிடிக்கப் போகிறார்கள்? போதிய விளம்பரச் செலவு இல்லாமலே கம்யூனிச மருந்து உலகெங்கும், குறிப்பாகத் தென்கிழக்கு ஆசியாவில் விலையாகி வரும்போது, அதற்கு மாறாக எளிய விலையில் விற்கக் கூடிய மருந்து ஏது இவர்களிடத்தில்! இலங்கையில் மாநாடு கூடிடுவோரால், கம்யூனிசத்தைத் தடுக்க முடியுமா முடியாதா, என்பது தெளிவாக விளங்காவிட்டாலும், அவர்களால் பாசிசப்பாதையைத் தெளிவாக உருவாக்க முடிகிறது. என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது.

இலங்கையில் கூடிடும் காமன்வெல்த் நாடுகளின் வெளிநாட்டுமந்திரிகள் மாநாட்டிற்கு, வெளியே சொல்லாத வேறோர் காரணமும் இருக்கக்கூடும் என்று ஊகிக்க இடமேற்படுகிறது. ஆசியாநாடுகளில அமெரிக்கா தன் டாலர் மழையைப் பொழிந்து, சுயநல அறுவடையைச் செய்யமுயற்சி செய்யும் போக்கைத் தடுக்கவும், தன் ஆதிபத்தியம் அழிந்து விடவில்லை என்பதை அகில உலகத்திற்கும் காட்டிக் கொள்ளவும், பிரிட்டன் செய்யும் முயற்சியே முக்கியகாரணமாகும் என்று ஊகிக்காமலிருக்க முடியாது.

காமன்வெல்த் மாநாட்டினரின் முன்னைய மனப்போக்குகளையும், நடைமுறைக்கொள்கையையும், மாநாடு கூட்டுவதன் நோக்கத்தையும் காணும்போது, பாசிசம் பக்கம் சாயவே துணிந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகப் புலப்படுகிறது. இந்த நிலைமை அவர்களுக்கும் நல்லதல்ல, அகில உலகத்திற்கும் நன்மை பயக்காது.

கம்யூனிச எதிர்ப்பு முன்னணியாகக் கூடி நாடகம் நடத்தும் இந்த நாடுகள், உண்மையிலேயே வறுமை எதிர்ப்பு முன்னணி அமைத்திருக்குமாயின், அது உள்ளபடியே உலக நோய் தீர்க்கும் வழியாகக் கொள்ளப்பட்டிருக்கும். கம்யூனிசம் பரவக்கூடாது என்ற வெறியுணர்ச்சியையே அடிப்படையாகக்கொண்டிருப்பதாலும் வறுமை எதிர்ப்பு இயக்கம் தொடங்குவதுதான் இந்த நாடுகளின் வேலையாக இருந்திருக்கவேண்டும். வறுமை எதிர்ப்பு முன்னணி அமைக்காமல், கம்யூனிச எதிர்ப்பு முன்னணி அமைக்கப்படுவதால், அதனால் பலனேதும் ஏற்படப் போவதில்லை என்பதை முன்கூட்டியே யுணர்ந்து, நடித்துக் கலையும் நாடகம் போன்றது இலங்கை மாநாடு என்கிறோம்! இலங்கை நாடகம் கண்ணுக்கும், காதுக்கும்கூட இனிமை தருவதாக இருக்கும்; ஆனால் கருத்துக்கு இனிமை தரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை; காரணம், நடிகர்களை உலக அரசியல் அரங்கங்கள் முன்கூட்டியே அறிந்திருப்பதால்!

## ஆட்சியாளரின் அடுத்த இரு பாணங்கள்?

சென்னை, ஜன. 10—

திருச்சி 'திராவிடமணி' வெளியீட்டாகத் தோழர் டி. எம். முத்துவால் வெளிக் கொணரப்பட்ட 'பெரியார் பொன்மொழிகள்' என்ற புத்தகத்தைப் பறிமுதல் செய்யுமாறு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்து விட்டனரெனத் தெரிகிறது.

தூத்துக்குடித் தோழர் எம். எஸ். சிவசாமி வெளியிட்ட 'சவுக்கடி' என்ற நூலையும் பறிமுதல் செய்வதோடு, ஆசிரியர் மீதும் வழக்குத் தொடர்ந்து, அதனை அச்சிட்ட அச்சகத்தார் மீதும் ஜாமீன் கோருமாறு கட்டளை பிறப்பிக்குமாறு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## குழந்தைகள் 'ரேஷனிங்'!

### தேவை என்கிறார் மந்திரி சந்தானம்

வளரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை நாம் மேற்கொள்ளாத பட்சத்தில் நாட்டின் மனித சக்தி பொருளாதாரச் சுமையாகவே வந்து முடியுமென இந்திய சர்க்கார் ரயில்வே ராஜாங்க மந்திரி தோழர் கே. சந்தானம் வபோலா கல்லூரி கூட்ட மொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். இந்தியாவுக்கு இன்று ஏதாவது ஒரு 'ரேஷனிங்' முறை தேவைப்படுகிறதென்றால், அது 'குழந்தைகள் ரேஷனிங்' தான் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### தோழர் ஆச்சாரியார்

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் ஜனவரி 27-ந் தேதி யன்று விமான மூலம் டெல்லியிலிருந்து புறப்பட்டு சென்னை வந்தடைவார். அவருக்கு உத்தியோகப் பூர்வமான வரவேற்பொன்றளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

## அறிவுக் கதிர்!

ஆணும் பெண்ணும் சமம் என்பதே எனது தீர்ப்பு. எனக்கிருக்கும் உரிமைகளனைத்தும் அவளுக்கும் உண்டு. அத்துடன் அவள் தனக்குரிய பாதுகாப்பைப் பெறும். அதிகப்படியான உரிமையும் அவளுக்கு உண்டு. இதுவே எனது கொள்கை.

— இங்கர்சால்

# ஆந்திரப் பிரிவினை ஜனவரி 26-க்குள் ஏற்பட இயலாதாம்!

## பண்டிதர் கூற்றுக்கு "ஆமாம்" போடும் அமைச்சர்கள்!

### பிரிவினைத் தேதியை ஒத்திப் போடுதல் பிரச்னையை சிக்கலாக்கும்

பிரதம மந்திரி நேரு கூறியவற்றிலிருந்து, அவகாசமின்மையால் ஆந்திர மாகாணத்தை ஜனவரி 26-ம் தேதிக்குள் அமைப்பது கடினமாக இருக்குமென்று அவர் திட்டமாக அபிப்பிராயப்படுகிறார் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

— அமைச்சர்: பக்தவத்சலம்

ஆந்திர மாகாணத்தை ஜனவரி 26-ந் தேதிக்குள் ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்று பிரதம மந்திரி தெரிவித்த அபிப்பிராயத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இம்மாதிரி முக்கியத்வம்வாய்ந்த விஷயத்தில் நாம் அவசரப்படத் தேவை ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

— அமைச்சர்: சிதாராமரெட்டி

ஜனவரி 26-ம் தேதிக்குள் ஆந்திர மாகாணத்தை அமைப்பது மிகக்கஷ்டமாக இருக்குமென்று பிரதம மந்திரி கூறியதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

— அமைச்சர்: சஞ்சீவி ரெட்டி

அண்மையில் இந்திய பிரதமர் பண்டித நேரு இலங்கைக்கும் போகிற போக்கிலே ஆந்திர மாகாணப் பிரிவினை பற்றி வெளியிட்டக் கருத்தினை எதிரொலிக்கின்றனர் நம் மேலே எடுத்துக் காட்டியுள்ளவை.

ஆந்திர மாகாணப் பிரிவினையின் அவசியத்தைப் பற்றி அடிக்கடி பேசி வந்த அமைச்சர்களெல்லாம், ஆந்திர மாகாணப் பிரிவினை ஜனவரி 26-ம் தேதிக்குள் நடைபெறக்கூடியதல்ல என்ற கருத்தை பண்டித நேரு வெளியிட்டதும், சொல்லிவைத்தாற்போல் "ஆமாம்" போட ஆரம்பித்துவிட்டனர்.

ஜனவரி 26-க்குள் மாகாணப் பிரிவினை கைகூடுமோ கூடாதோ என்பது பற்றி, நேரு திருவாய் மலர்ந்தருளுவதற்கு முன், நமது அமைச்சர்கள் அபிப்பிராயம் ஏதும் கூற முன்வந்தார்களில்லை. ஆனால் நேரு சொல்லிவிட்டவுடன் அவரது கருத்தை கிராமபோன் பிளேட் போல் திருப்பித்தர முன்வந்துவிட்டனர் அமைச்சர்கள்.

மாகாணப் பிரிவினை என்பது எளிதான செயலன்று, ஆய்ந்து தோய்ந்து பார்த்து முடிவுகட்ட வேண்டிய விஷயம். இப்படிப்பட்ட விஷயத்தை ஒரு முடிவு செய்து ஜனவரி 26-ந் தேதி என்று நாளும் குறிப்பிட்டுவிட்டனர். இன்னனம் நாள் குறிப்பிட்ட பின் பிரதமர் சொல்லுகிறார் என்ற காரணத்துக்காக அது அசாத்தியமான காரியம் என்று சொல்லுகிறார்களென்றால் இந்த அமைச்சர்களின் பிரகாசத்திறன் கரும்பொருளாக்கும் ஆற்றல் முதலியன எந்த அளவிலே இருக்கிறது என்பதை நாம் கணிப் பார்க்கவேண்டும்.

மந்திரிசபை வரும் வொரு ஞாபகத்தாலே என்பவர்கள் ஆனால் நமது மந்திரிகள் விஷயம் அப்படியல்ல. மேலவர்கள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள் இவர்கள். சரி, இது எப்படியேனும் இருந்து தொலையட்டும். ஆந்திர மாகாணம் பிரிவினை கதி என்னவாகும் என்பதுபற்றி கவனிப்போம்.

ஆந்திர மாகாணப் பிரிவினை பற்றிய பேச்சுப் பேசப்படுவது இன்றோ நேற்றல்ல பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. அதிலும் கடந்த இரண்டு ஆண்டு காலமாக இப் பிரச்னை சற்று காரசாரமாகப் பேசப்பட்டு வருகிறது. அதன் விளைவாகவே ஆந்திர மாகாணப் பிரிவினை ஜனவரி மாதத்திலேயே அமுல் நடத்துவது என்ற முடிவு செய்யப்பட்டது. அவ்வளவு முடிவு செய்யப்பட்ட ஒரு பிரச்னையை மேலும்மேலும் ஒத்திப் போட்டுக்கொண்டு போக நினைக்கின்றனர் மேலிடத்தார். இது மிக மிக வருந்தத்தக்கது. இதனால் பிரச்னை மேலும் சிக்கல் கட்டமேற்படும். ஏற்கனவே ஆந்திரருக்குச் சென்னையைப் பற்றிய ஆசை வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்நிலையில் பிரிவினைத் தேதியை ஒத்திப் போடுவதால் சென்னையில் ஆந்திரர் உரிமை கொண்டாட அவகாசம் அளிப்பதாகவே முடியும்.

மூவர் கமிட்டிக் கர்த்தாக்களுள் ஒருவரான தோழர் பட்டாபி சீதாராமையா அவர்கள் அண்மையில் பத்திரிகை நிருபர்களுக்கும் பதிலளிக்கையில் "தற்காலிகமாக சென்னையே ஆந்திரத்துக்கும் தலைநகராக இருக்கலாம்" என்று சொல்லியிருக்கிறார். இதற்கு முன் பலதடவை சென்னை மீது உரிமை கொண்டாடியவரும் அவரே. இவற்றையெல்லாம் சற்று ஆராய்ந்து பார்க்கின்ற போது ஆந்திரப் பிரிவினையை தள்ளிப் போடுவது சரியல்ல. தள்ளிப் போடும் நோக்கத்துக்கு நமது அமைச்சர்கள், அதிலும் பக்தவத்சலம் போன்ற தமிழ் அமைச்சர்கள் ஆதரவு தருவது ஏற்றதல்ல என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

### சீன தேசீய தூதுக் குழுவினர்க்கு கல்தா கொடுக்கவும்!

ஐ. நா. வக்தோபந்து சபையிலிருந்து தேசிய சீனப் பிரதிநிதிகளைத் தீர்த்துவிடுமாறு சீன கம்யூனிஸ்டு சர்க்கார் கடந்த 8-ந் தேதியன்று, ஐ. நா. பொது சபைத் தலைவருக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கின்றதாம். இதே போன்ற தந்திச் செய்திகள் தோழர் ட்ரிக் லீக்கும், ஐ. நா. வக்தோபந்து சபை உறுப்பினர்கட்கும் அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

# போர்க்களம்!

[சொல்லம்பு]

இது போராட்டம் மிகுந்த காலம். உலகில் எங்கு நோக்கினும் ஏதேனுமொரு போராட்டம் நிகழ்ந்தவண்ணமிருக்கிறது. இதற்கு அடிப்படை காரணங்களாக அமைந்துள்ளமை இனவெறி, நிறவெறி, பணவெறி முதலியனவாகும்.

இம்மூவகை வெறிகளை முறியடித்தாலன்றி எந்த நாடும் முன்னேற இயலாது. உலகில் அமைதி நிலவுவதும் குதிரைக்கொம்பாகவே முடியும். அதிலும் நம்நாட்டின் போக்கே ஒரு தினிசம்! உலகம் அறியாமையினின்று விடுபட்டு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், மக்களை அறியாமைப் படுகுழியில் அழுத்தவல்ல சக்திகளுக்கு அறிஞர்களென்னப்படுவோரே மிக்க ஆதரவு தந்துவருகின்றனர் இங்கு. ஆகவே, மற்ற நாட்டவரின் போராட்டத்தைவிட நம் நாட்டவர் போராட்டம் மிமிகச் சிக்கலானது. இனவெறியும், நிறவெறியும் உருண்டு திரண்டு மதவெறியாகவும், வைதிக வெறியாகவும் காட்சியளிக்கிறது இங்கு. அதுமட்டுமன்றி முதலாளித்வம் முறுக்குடன் வாழ வைதிகம் வழிவகுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இதனால், இந்நாட்டில் சமதர்ம போராட்டம் பெருந்த அளவு தடைபடுகிறது. இத்தகைய சிக்கலான நிலைமையைச் சீர்படுத்தி அரசியல், பொருளாதார, சமுதாய இயல்களில் முன்னேற்றம் காணவேண்டுமானால், நமது போராட்டம் இப்போதிருப்பதைவிட சற்று கடுமையாகவே இருந்தாக வேண்டும். அந்த நோக்கத்துடன் வகுக்கப்பட்டதுதான் இந்தப் போர்க்களம்.

இது ஜனநாயகப் போர்க்களம்; இதில் நடைபெறுவன செற்போரேயன்றி மற்போரல்ல. எங்கெங்கு அறியாமையும் அனாசாரமும் காணப்படுகிறதோ, அங்கெல்லாம் நமது சொல்லம்பு பாயும். வைதீகத்தையும், அதன் நிழலிலே நிலைக்குநிற்க முயலும் முதலாளித்வத்தையும் முறியடிக்க சொல்லம்பு விரைந்து செல்லும். சிறப்பாகத் தொழிலாளர் துயர்துடைக்கவேண்டிய அவசியமும் அவசரமும் நேரும்போதெல்லாம் சொல்லம்பு அதன் வேலையைச் செய்யத் தயங்காது.

அதுமட்டுமல்ல; இந்த ஜனநாயகப் போர்க்களம் ஆக்க வேலையைக் குறிக்கோளாகக் கொண்டதாகையால், ஆக்க வேலைக்கான அறிவுரைகளை அவசியமானபோது அரசியலாருக்குத் தந்துதவும் களமாகவும் திகழும் இந்தப் போர்க்களம். ஆனால் அடக்குமுறைகளைச் சா[illegible] ஆணவத்தை அழிக்கத் தயங்காது. சுருங்கச் சொல்லவேண்டுமானால், ஆதிக்கவெறி எந்த உருவிலே வெளிப்பட்டாலும், அதனைத் துகைத்தழிக்க முனைந்து நிற்கும் சொல்லம்பு.

இன்றைய உலகம் முதலாளித்வ முகாம், பாட்டாளி வர்க்கம் என இரு பெரும் முகாம்களாகப் பிரிந்து நின்று ஒன்றையொன்று எதிர்த்துப் போர் தொடுத்தவண்ணமிருக்கின்றது.

ஐரோப்பாவில் வேகமாகப் பரவிவரும் பொதுவுடைமைப் போராட்டத்தை நசுக்க, அமெரிக்கா திட்டமிட்டு வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. மார்ஷல் திட்டம் என்ற பெயரில் கோடிக்கணக்கில் டாலர்களை லஞ்சமாகக்கொடுத்து சின்னஞ்சிறு நாடுகளை தனக்கு அடிபணியச் செய்யவும் அவற்றையெல்லாம் ரஷியாவுக்கு எதிராகக் கிளப்பிவிட்டு வேடிக்கைப் பார்க்கவும் துணிந்து முன்வந்துள்ளது அமெரிக்கா.

ஐரோப்பாவைப் பிடித்துள்ள இத்தகைய முதலாளித்வ மோசடி ஆசிய நாடுகளிலும் பரவ ஆரம்பித்துவிட்டது. கடந்த சில நாட்களுக்கு முன் அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ரூமன் தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கும் டாலர் உதவி அளிக்கவேண்டும் என்று பேசியிருப்பதே இதனை விளக்க போதிய சான்றாகும்.

மேலும் அண்மையில் இலங்கையில் காமன்வெல்த் மாநாடு கூடியிருப்பதும் இதற்கோர் எடுத்துக்காட்டாகும். காமன்வெல்த் உறவு என்ற பெயரில் ஆசிய நாடுகளில் முதலாளித்வம் ஆதரவு தேட ஆரம்பித்திருக்கிறது, இந்த அரும் பணியை பிரிட்டன் அமெரிக்காவின் சார்பிலே நின்று ஆற்றிவருகிறது. சுருக்கச் சொல்லவேண்டுமானால் ஆசியநாடுகளில் முதலாளித்வத்துக்கு ஆதரவு திரட்டவும், பூத்துவரும் பொதுவுடைமைப் போராட்டத்தைப் பொசுக்கவும் அமெரிக்காவுக்கு ஒரு ஏஜெண்டாக இருந்து வேலை செய்கிறது பிரிட்டன் என்று சொன்னால் அது மிகையாகாது. அதுபோலவே, பிரிட்டனின் ஆணைக்குட்பட்டு, ஆசிய நாடுகளைத் தன் வசப்படுத்தும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறது இந்தியா. எனவேதான், அடிக்கடி இந்தியாவைத் தட்டிக்கொடுத்து பேசுகின்றன அமெரிக்காவும் பிரிட்டனும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் இம்மாதம் 26-ந்தேதி இந்தியா புததாட்சிப் பெறப்போகிறது. இதனை மகிழ்ச்சிக்குரிய செய்தியென்று நாம் கருதுவதற்கில்லை. நாடு விடுதலை பெறுகிறதேயென்று சொல்லப்பட்டாலும் இந்த விடுதலைய திராவிடத்துக்குக் கெடுதலையேயன்றி வேறில்லை. இப்போதே ஆட்சியாளரின் போக்குக் கண்மூடித்தனமாக இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்துவரும் 26-ம்தேதிக்குப்பின் இப்போதுள்ள அடக்குமுறைகள் மேலும் வலுப்பெறுமானால், அதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் நமது ஆட்சியாளர் அடக்குமுறையில் நம்பிக்கைக் கொண்டிருக்கும் அளவு ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆட்சியாளர் யாரை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்ய இன்றைய ஆட்சிமுறையில் இடமிருக்கிறது. நினைத்தால் நெஞ்சு பதறும்நிலைமையிலிருக்கிறோம் நாம். ஜனநாயகம் பேச்சளவோடுதான் நிற்கிறதேயன்றி நடைமுறையில் காண முடியவில்லை. ஆளும் காங்கிரஸினரின் காலத்துக்கு மாறுபட்டோர் வாழ்வு அல்லல் நிரம்பியதாகவே இருக்கும்படியிருக்கிறது.

இத்தகைய பயங்கர அரசியல் சூழ்நிலை ஒருபக்கமிருக்க வைதிகம் ஒருபுறம் நமக்குச் சவால் விடுத்துக்கொண்டிருக்கிறது. பகுத்தறிவாளரின் பேச்சுக்கும் எழுத்துக்கும் மாறாக எட்டிக்குப் போட்டி, என்ற முறையிலே ஆங்காங்கு புராணங்களுக்குப் புத்துயிரும், அறியாமையை வளர்க்கும் மதச் சடங்குகளுக்கு ஆக்கமும் அளிக்கப்பட்டு வருகிறது. புதுமைக் கருத்துகளைக் கொண்ட பகுத்தறிவேடுகள் பறிமுதல் செய்யப்படும் வேலை ஒருபுறம் நடைபெறும்போது, புதிது புதிதாக தலபுராணங்கள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அண்மையில் உற்பத்தியான கோடம்பாக்கம் வடபழனி ஆண்டவனின் வரலாறு வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது. இதுபோன்ற செய்திகள் எதைக் காட்டுவனவாகும் என்பதைத் தோழர்கள் சிந்திக்கவேண்டும். ஆகவே நமது பகுத்தறிவுப் பிரசாரம் இன்னும் போதிய அளவில் பயன் தரவில்லை. பயன் தரும்படி பணியாற்றவேண்டும்.

இத்தகு பணிகளைச் செய்ய வேண்டுமாயின், நமது பணிகளுக்கு முட்டுக்கட்டையாய் நிற்பனவற்றையெல்லாம் எதிர்த்துப் போராட வேண்டுமன்றோ? அதற்கென தோற்றுவிக்கப்படுவதுதான் இந்தப் போர்க்களம்!

## யானை செய்த குற்றத்திற்கு மான நஷ்ட வழக்கு!

லண்டன், ஜன. 10—

பிரிஸ்டல் உயிர்க் காட்சி சாலையில ஒரு யானை ஒரு பெண்ணின் கையிலிருந்த பையை பிடுங்கி விழுங்கிவிட்டது. இதற்கு மான நஷ்டம் கோரி உயிர்க் காட்சி சாலை அதிகாரியின் மீது அந்தப் பெண் வழக்கு தொடர்ந்திருக்கிறாள். —குளோப்

## "கிளர்ச்சி"க்கு ஜாமீன்

தூத்துக்குடியிலிருந்து வெளிவரும் "கிளர்ச்சி" இதழ் மீது அரசாங்கத்தார் தொடுத்திருந்த வழக்கானது கடந்த டிசம்பர் 12-ந் தேதி தூத்துக்குடி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் அவர்களால், ஆசிரியரும், அரசாங்கத்தாருக்குச்சேர்ந்து ரூ 500 அபராதம் கட்ட வேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டு முடிவுற்றது.

## சென்னை மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

### அறிவிப்பு

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக முதல் மாநாடு, ஜனவரி 15-ம் தேதியில் நடைபெறவிருந்ததை, வெளியூர்த் தோழர்களது பொங்கல்நாள் கொண்டாட்ட வசதிக்கேற்ப, மாற்றி, ஜனவரி 21, 22, ஆகிய இரண்டு நாட்களிலும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஷை மாநாடு 21-1-50 சனி மாலை 3 மணிக்குத் துவக்கப்பட்டு, மாலை 6 மணி வரை நடைபெற்று அதற்கு மேல் இரவு 9-30 மணிவரை, தோழர் சி. என். ஏ. எழுதிய புரட்சிச் சித்திர ஓரங்க நாடகங்கள் நிகழ்ச்சியுடன் முடிவடையும் மீண்டும் மறுநாள் 22-1-50 ஞயிறு காலை 9 மணிக்கு மாநாடு ஆரம்பமாகி (இடைவேளை நீங்கலாக) மாலை 7—மணிக்கு முடிவடைந்த பின் இரவு 9 மணிக்கு, சி. என். ஏ. கே. ஆர். ஆர். நடிக்கும் "சந்திர மோகன்" நாடகம் நடைபெறும்.

குறிப்பிட்ட எண்ணிக்கைதான் டிக்கட் போடப்பட்டுள்ளது. டிக்கட் வேண்டிய வெளியூர்த் தோழர்கள் "தோழர் இரா. நெடுஞ்செழியன், 2/45 முத்துமாரிசெட்டித்தெரு, மண்ணடி சென்னை" என்ற முகவரிக்கு முன்னாகவே மணி ஆர்டர் செய்து டிக்கட்டிற்குப் பதிவு செய்து கொள்ளவும்.

இன்று முதல் சென்னையில் கீழ்க்கண்டவிடங்களில் டிக்கட் விற்பனை செய்யப்படும்:-

1. மாலைமணி ஆபீஸ். 2/45 முத்துமாரி செட்டித் தெரு மண்ணடி, சென்னை.

2. எம். ஆர் பாண்டியன் பாண்டியன் ஜவுளிக்கடை மணியக்கார சத்திரச்சாலை வண்ணாரப்பேட்டை, சென்னை

8. எஸ். பாலசுந்தரம். மாறுபதி ஜவுளிக்கடை நுங்கம்பாக்கம் ஐரோடு. நுங்கம்பாக்கம் சென்னை.

4. கே. திருவேங்கிடம், ரொட்டிக்கடை 200. ராசப்ப செட்டித்தெரு, பார்க் டவுன், சென்னை.

இரண்டு நாட்களுக்கும் டிக்கட் விவரம்:—

| | | |
|---|---|---|
| பிரதிநிதி | ரூ. | 1-8-0 |
| வரவேற்பாளர் | ரூ. | 2-0-0 |
| ஆதரவாளர் | ரூ. | 5-0-0 |
| நன்கொடையாளர் | ரூ. | 10-0-0 |

கே. கோவிந்தசாமி
செயலாளர்.

## பெல்ஜியத்திற்கு 7½ லட்சம் ஸ்டலிங் ஒதுக்கப்பட்டது

லண்டன், ஜன. 10—

பெல்ஜியத்திற்கு பிரிட்டிஷ் கிடிலாசா மேற்கொண்டு 7½ லட்சம், ஸ்டர்லிங் ஒதுக்கியிருப்பதாக 'மான்செஸ்டர் கார்டியன்' அறிவித்திருக்கிறது.

## கிரிமினல்களை யோக்கியர்களாக்க...

மூளையில் சிறு ஆபரேஷன்

லண்டன், ஜன. 10—

கிரிமினல் குற்றங்களை செய்தவர்களின் மூளையில் ஒரு சிறு ஆபரேஷன் செய்வதன் மூலம், அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்று பிரிட்டிஷ் சர்ஜன்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். எல்லாகிரிமினல்களையும் இம்மாதிரி செய்துகொண்டிருக்க முடியாதென்றாலும், சில ஆண்டு காலத்தில் அநேகரை யோக்யர்களாகச் செய்ய முடியும்என்று நம்பப்படுகிறது.

## புற்று நோய் பற்றிப் புது ஆராய்ச்சி

நியூயார்க், ஜன. 10—

புற்றுநோய் எற்பட்டால் அத்துடன் தனியாக ஒருசதையும் வளர்கிறது என்பது பில்டெல்பியா புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் ஐரென்டில்லர் என்பவரால், கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது விஷயமாக மேலும் ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டியிருக்கிறது. என்று அவர் கூறுகிறார்.

## தேசீயத் துறைமுக போர்டு அமைக்க மத்திய போக்குவரத்து போர்டு சிபாரிசு

துறைமுக அபிவிருத்தி சம்பந்தமான பொதுக் கொள்கை பற்றிய விஷயங்களில் சர்க்காருக்கு ஆலோசனை கூற தேசிய துறைமுகபோர்டு ஒன்றை அமைக்க வேண்டுமென்று, போக்குவரத்து ரயில்வே மந்திரி தோழா கோபாலசாமி அய்யங்காரின் தலைமையில் இன்று இங்கு கூடிய மத்திய போக்குவரத்து போர்டு சிபாரிசு செய்திருக்கிறது. பெரிய துறைமுக நிர்வாகங்களின் பிரதிநிதிகளும் கடலோர மாகாண சமஸ்தான சர்க்கார்களின் பிரதிநிதிகளும், துறைமுக சம்பந்தமான மத்திய சர்க்கார் இலாக்காக்களின் பிரதிநிதிகளும் இந்த தேசிய துறைமுக போர்டில அங்கத்தினராயிருப்பார்கள். தொழில், வர்த்தகம், சங்கம், ரயில்வேக்கள், போக்குவரத்து மார்க்கங்கள், பாதுகாப்பு ஆகியவற்றிற்கும் துறைமுக நிர்வாகத்துக்குமிடையே ஒரு இணைப்பை எற்படுத்துவதே இந்த போர்டின் முக்கிய வேலையாக இருக்கும்.

ரயில்வேபோக்குவரத்துராஜாங்க மந்திரி தோழர் சந்தானம, மத்திய சர்க்கார் போக்குவரத்து, ரயில்வே, நிதி இலாக்காக்களைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள், கல்கத்தா, பம்பாய், சென்னைத் துறைமுகங்களின் தலைவர்கள், மைசூர், திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களின் மந்திரிகள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்,

இந்தியாவில் மேற்குக் கடற்கரையில் மார்மகோவாவுக்கும் கொச்சிக்கும் மத்தியில் அமைக்கப்படவிருக்கும் பெரிய துறைமுகத்தை எந்த இடத்தில்அமைப்பது என்பதுபற்றி மேற்குக் கடற்கரை பெரிய துறைமுக அபிவிருத்திக் கமிட்டி செய்துள்ள சிபாரிசுகளும், தென்னிந்தியாவில் புதிய ரயில் பாதைகள் அமைப்பதற்கான திட்டங்களும் இக்கூட்டத்தில் விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டன.

மார்மகோவாவுக்கும், கொச்சிக்கும் மத்தியில் பெரிய துறைமுகமொன்றை அமைக்கும் விஷயம் பற்றி, போர்டு சம்பந்தப்பட்ட சமஸ்தானங்கள், மாகாணங்களின் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைக்கேட்டுத் தெரிந்துகொண்டது. இத்திட்டம பற்றிய மேற்கொண்டு பரிசீலனை ஒத்திவைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில விவாதிக்கப்பட்ட புதிய ரயில் பாதைத் திட்டங்களில், சாமராஜநகர்—சத்யமங்கலம்—கோயமுத்தூர் பாதையும், கொல்லம், எர்ணுகுலம் பாதையும் முக்கியமானவையாகும்.

# ★ நாட்டு நடப்பு ★

### நெல்லை வள்ளுவர் படிப்பகம்

நெல்லை, ஜன. 6—

கல்லத்திமுடுக்குத் தெருவில் 25—12—49 ஞாயிற்றுக் கிழமை காலை 11-மணிக்கு "நெல்லை வள்ளுவர் படிப்பகம்" நிறுவப்பட்டு, மே. சங்கரன். தி. ஆ. தியாகராசன் செயலாளர்களாகவும் சு. கோபால கிருட்டிணன் நிதி உறுப்பினர் ஆகவும் மற்றும் ஆறு பேர்கள் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்தெருவிற்கெதிர் புறமுள்ள கிழக்கு தேர்த்தெருவாளமனைக்கு "சா. சுப்பிரமணியனார்சதுக்கம்" என்றபெயரை வழங்கி படிப்பகசார்பாகப் பொதுக் கூட்டங்கள் போடுவதெனவும் எல்லோரும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

### அகத்தியர் விழா

சென்ற 7—1—50 மதுரை பிள்ளையார் பாளையம் ரோடு சித்த வைத்திய சங்கக் காரியாலயத்தில் அகஸ்தியர் பிறந்த தின விழா மிகச் சிறப்பாக நடத்தி அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

* * *

### இளங்கோ முத்தமிழ் பயில் மன்றம்

சென்னை, ஜன. 5—

29—12—49 அன்று மாலை 7 மணிக்கு குளோ, இளங்கோ முத்தமிழ் பயில் மன்ற நிர்வாகக் குழு, தோழர் பா. ஆபத்சகாயன் அவர்கள் தலைமையில் கூடி நான்கு பேர் கொண்ட 'கட்டிட நிதிவசூல் குழு' ஒன்றை ஏற்படுத்தியது. இன்னும் இரு தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் நிறைவு பெற்றன.

● ● ●

### வாலாஜாதாலுகா வன்னிகுல சங்க நிர்வாக சபைக்கூட்டம்

வாலாஜபேட்டை, ஜன. 6—

2—1—50 பிற்பகல் 3 மணிக்கு தோழர் கோ. லோகநாதனார் தலைமையில் டி கூட்டம் கூடியது. நடைமுறை ஆண்டுக்குக் கீழ்கண்டவர்களை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—ஏ. எம். ரங்கசாமி அவர்கள் துணைத்தலைவர்:—கே. கன்னியப்பனார், பொதுச்செயலாளர்:—சி. அ. வரதராசன், விளம்பரசெயலாளர்:—கோ. லோகநாதாபர், பிரசாரச் செயலாளர்:- எம். கண்ணன், பொருளாளர்:— என். ஆர். முனிசாமி, பி.ஏ.பி.எல்.

சென்ற மாநாட்டின் வரவு செலவு படித்து காண்பிக்கப்பட்டு மீதி இருப்பு ரூ. 269 காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. வாலாஜாநகரில் மாணவர் இல்லம் நிறுவ தீர்மானிக்கப்பட்டு அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது.

பிறகு வந்திருந்த அனைவருக்கும் தேனீர் விருந்தளிக்கப்பட்டு செயலாளர் சி. அ. வரதராசன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது. (ஒ வி)

* * *

### மீலாத் விழா

தாராபுரம், ஜன. 5—

நபிமணியவர்கள் நானிலத்தில் தோன்றிய நன்னுள் 2—1—50 மாலை 5 மணியளவில், தாரை நீதி மன்ற முன்சிப்ஜனுப் எச். அஹமது இப்ராஹீம் B. A., B. L. அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. வாணியம்பாடி, இஸ்லாமியக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் ஜனுப்கா அப்துல் கபூர் எம். ஏ., கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸ் டைரக்டர் தோழர் எ. எஸ். ஏ. சாமி, பி. ஏ. ஆனர்ஸ், ஜனுப் எம். எஸ். ஜெயிலானி, பண்டிட் ஜெயிலானி, திருசேஷல்வர் எம். ஏ. எல் டி. ஜனுப் டாக்டர். அப்துர் ரஷீது ஆகியோர் நபிமணியின் வாழ்க்கையைக் குறித்தும், இன்ல மிகப்போதனை, பண்பாடு ஆகியவற்றைக்குறித்தும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்;

### பாராட்டுக் கூட்டம்

சென்ற 25—12—49 மாலை 7-மணிக்கு ஆம்பூர் கிருஷ்ணாபுரம் மக்கள் மைதானத்தில், ஆம்பூர் சாரண்மைச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற வ. ஆ. ஜில்லா பெடரேஷன் தலைவர் எம். ஆதிமூலம் (பொதுத்தொகுதியில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்) எ. அப்பா (ஒதுக்கப்பட்ட தொகுதி) பி ஜி. சாமிதாஸ் (இதில் அவதொகுதி) இவர்கட்கு வாழ்த்துக்கூட்டம் வ. ஆ. ஜில்லா பெடரேஷன் காரியதரிசி கே. எம் சாமி, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு எம். கிருஷ்ணசாமி (பள்ளிக் கொண்டா) ஆர். சுப்பிரமணியம், (வேலூர்), குடியேற்றம், எம். தனபால், சாணாங்குப்பம் ஏ. பெருமாள்; எஸ். சுப்பிரமணியம், முதலியவர்கள் பேசினர்கள். அன்று பகல் எல்லோருக்கும் டீ விருந்து நடைபெற்றது.

(ச-சி)

● * *

### தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்

சாட்டாத்தூர், ஜன. 5—

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சாட்டாத்தூர்கிராமத்தில் 29-12-49 மாலை 8-மணிக்கு டி ஊர் ஆசிரியர் கே. ஜெகநாதன் அவர்கள் தலைமையில் ஏ. கே. சோமசுந்தரம் அவர்களால் கொடியேற்றப்பட்டு கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

அவ்வமயம் சமார் 500-க்கு மேற்பட்ட ஆதித்திராவிட மக்களும் மற்றவர்களும் குழுமியிருந்தனர்.

தோழர் எ.டி என். இராமசாமி ஆசிரியர் சி. வைரம், எ. கே. கோவிந்தசாமி, ஆசிரியர்கள் எ. தங்கவேல், கே. சடையன் முதலியோரால் ஆதித்திராவிடமுன்னேற்றக் கழகத்தின் அவசியம்பற்றி மக்களுக்குத் தெளிவுபட விளக்கிக் கூறப்பட்டது.

ஆசிரியர்எ.தங்கவேலுவால்நன்றி கூறப்பட்டு இரவு 11-மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்ற..

30-12-49 காலை 8-மணிக்குத் தோழர் எ. டி. என் இராமசாமி அவர்கள் தலைமையில் கொடியுடன் ஊர்வலம் வந்து டி ஊரிலுள்ள எல்லா ஆலயங்களிலும் ஆதித்திராவிட மக்கள் ஊர்வலமுடன் ஆலயப் பிரவேசம்செய்து டிவைவை வைச் சிறப்பாக நடத்தினர்.

* * *

### அச்சுத் தொழிலாளர் சங்கம்

சேலம், ஜன. 5—

1-1-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் இருந்து மேட்டூர் தொழிலாளர் தலைவர் தோழர் எம். சுரேந்திரன் அவர்கள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு முக்கியத் தெருக்களின் வழியாக போஸ் மைதானம் அடைந்தது.

அதுசமயம் அங்கு நடந்தபொதுக் கூட்டத்திற்கு தோழர் கே. எஸ். மாணிக்கம் தலைமை வகித்தார் அப்பொழுது தோழர் ஏ. சுவாமிநாதன் சேலம் ஜில்லா அச்சுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தோழர் எஸ். பி. பழனியப்பன், தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு அங்கத்தினர் தோழர் ஏ. சுப்பிரமணியம், மேட்டூர் தொழிலாளர் தலைவரும், சேலம் ஜில்லா சோஷலிஸ்ட் கட்சி காரியதரிசியுமான தோழர் எம். சுரேந்திரன் ஆகியோர் அச்சுத் தொழிலாளரின் கோரிக்கை நிலத்தைப்பற்றி பேசினர்கள். கூட்டத்தில் 15 தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன. பிறகு கூட்டம் இனிது முடிந்தது.

* * *

### தி. மு. இளைஞர் சொற்பயிற்சிக் கழகம்

சேலம், ஜன. 2—

சென்ற 29—12—49ந் தேதி வியாழக் கிழமை இரவு 8-30 மணிக்கு செவ்வாய்ப் பேட்டை, அங்காளம்மன் கோவில்தெரு 16 எண் உள்ள கட்டிடத்தில் தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் ஓர் அமைப்புக் கூட்டம் நடந்தது கீழ்கண்ட செயற்குழு நிறுவப்பட்டு இரவு சுமார் 10 மணிக்கு செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

செயலாளர்—தோழர் அ. திருஞானசம்பந்தன், து. செயலாளர்—இரா திருநீலகண்டன், ம. அருணாசலம். மற்றும் தோழர்கள் கே. எஸ். சீனிவாசன், அ. சம்பத்தன்; ஆர். கணேசசங்கரன், எல். அங்கண்ணன் ஆகியோரை செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

### பிரியாவிடை

திட்டகுடி, ஜன. 5—

2—1—50 அன்று இவ்வூர் மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில்சுமார்2ஆண்டு காலம் வேலை செய்து வந்த தமிழாசிரியர், வித்துவான் கனகசபாபதி அவர்கள்,வளவனூர் மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளிக்கு மாறுதல் ஆகி இருப்பதை முன்னிட்டு அன்னுருக்கு டி பள்ளி ஆசிரியர்கள் சார்பில் திட்டகுடி வட்ட கண்காணிப்பாளர் தோழர் கிட்டிணன் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஒரு தேனீர் விருந்து நடத்தப்பட்டது. அவ்வமயம் தலைவர் அவர்களாலும் மற்றுமுள்ள ஆசிரியர்களாலும் அன்னுரின் சேவையைப் பாராட்டி சொற்பொழிவு ஆற்றப்பட்டது. பிறகு நன்றி கூறலோடும் மேளவாத்தியத்துடனும் வாண வேடிக்கைகளுடனும் அன்னுரின் வீடுவரைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

● ● *

### வீர வ. உ. சிதம்பரனுர் கழகம்

அத்தக்குடி, ஜன.5—

1-1-50-ல் வீர சிதம்பரனுர் முன்னேற்றக் கழக 2 வது செயற்குழுக் கூட்டம் தோழர் கே. எம். ராசன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் பழைய நிர்வாக உறுப்பினர்களுடைய வரவு செலவு கணக்குகளும் புது நிர்வாக உறுப்பினருடையவரவு, செலவு கணக்குகளையும் கமிட்டியாரால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்பு 14-1-50-ல் கழகத்தின் சார்பாக தமிழ்த் திருநாள் வெகு சிறப்பாக நடத்துவதென்றும், தோழர்கள் கே. வி. கே. சாமி, இரா. சு. தங்கமழம், எம். எஸ்.சிவசாமி,து. இரத்தினம் முதலியோர்களை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பின் தோழர் கே. எம். ராசன் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும், காங்கிரஸிலிருந்து எதற்காக வெளியேறினேன் என்பது பற்றியும் வ. உ. சி. இந்த நாட்டிற்கு எந்த முறையில் சேவைசெய்தார் என்பதுபற்றியும், நமது கழக கட்டுப்பாடுபற்றியும் வெகு விரிவாகப் பேசியபின் கூட்டம் இனிது முடிவுற்றது.

---

### இந்தோனேஷ்யாவும் நாணய மதிப்பும்

லண்டன், ஜன. 10—

டச்சு மந்திரியாளர்கள் தாங்கள் சம்பாதிக்கும் அயல்நாட்டுக் கரன்ஸிகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை அவர்கள் இந்தோனேஷ்ய அயல்நாட்டு பரிவர்த்தனைக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்வதன்மூலம் டச்சு மந்திரி வர்த்தகத்தைப் பெருக்க இந்தோனேஷ்யா முயற்சிக்கும் என்று ஹாலந்தில் ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறது.

இப்பொழுது இல்லாவிட்டாலும் சீக்கிரமாகவே இந்தோனேஷ்ய நாணய மதிப்பைக் குறைக்கவே வேண்டியிருக்கும் என்று அப்பத்திரிகை எழுதி இருக்கிறது.

---

அமிரிக்கன் [illegible] புனே டெட் ஸ்டேட்ஸ் விமானிகளுக்கு அருவ பிரதேசத்தில் உயிருடனிருப்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

## திராவிட முன்னேற்றக் கழகம் இராமநாதபுரம் மாவட்டக்கிளை

அருப்புக்கோட்டை, ஜன. 3-

அருப்புக்கோட்டை நெசவாளர் சங்கக் கட்டடத்தில், இராஜாபாளையம் தோழர் ஆர் பி. ஆதிநாராயணன் அவர்கள் தலைமையில் அமைப்புக் கூட்டம் கூடியது. அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், கமுதி, சிவகாசி, திருத்தங்கல், இடைக்காட்டூர், விருதுநகர், கல்லூரணி, மண்டலமாணிக்கம், வீரசோழபுரம், மம்சாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஏழாயிரம் பண்ணை திருப்புவனம், தளவாய்புரம், மானாமதுரை. இராஜபாளையம், மேலாண்மறைநாடு, மேலக்கோட்டையூர், சின்னபுரம் ஆகிய ஊர் கிளைக் கழகப் பிரதிநிதிகள் 34 பேர் கூடியிருந்தனர்.

### நடவடிக்கை விவரம்

அமைப்புக் கூட்டத்திற்கு வந்திருந்த 35 பிரதிநிதிகளையும் இராமநாதபுர மாவட்டக் கழகப் பொதுக் குழுவினராகத் தீர்மானிக்கப்பட்டது.

அருப்புக்கோட்டை தோழர் எம் எஸ் இராமசாமி செயலாளராகவும், இராமநாதபுர தோழர் இரா. கா. வீரமணி துணைச் செயலாளராகவும் விருதுநகர் தோழர் எம். இளஞ்செழியன் விளம்பர உறுப்பினராகவும், அருப்புக்கோட்டை தோழர் சிவ. சண்முகசுந்தரன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒன்பது வட்டங்களிலிருந்தும் வட்டம் ஒன்றுக்கு இரண்டுபேர் வீதம் தற்போது வந்துள்ள அடியிற் கண்ட தோழர்களை செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதென்றும், பிரதிநிதிகள் வராத வட்டங்களிலிருந்தும், தேவையானவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு செயலாளருக்கு அதிகாரம் அளிப்பதென்றும், நிறைவேறிய தீர்மானங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத் தோழர்கள் தளவாய்புரம் எஸ். காளிமுத்து இராஜபாளையம் ஆர். பி. ஆதிநாராயணன் அருப்புக்கோட்டை வட்டத் தோழர்கள் கல்லூரணி கா. ச. நடராசன், வீரசோழன், க. இ அ இபுராஹிம், சாத்தூர் வட்டத் தோழர்கள், ஏழாயிரம் பண்ணை சி. ஆறுமுகச்சாமி, சிவகாசி எ. சுப்பையா, சிவகங்கை வட்டத் தோழர்கள் மானாமதுரை. அ. உ. இராமநாதன். சிவகங்கை இராஜசேகரன் முதுகுளத்தூர் வட்டத் தோழர்கள். கமுதி இ. ல. ம. சௌந்தர பாண்டியன், மண்டலமாணிக்கம், நா. இராதாகிருஷ்ணன் ஆக வட்டம் 5-க்கு உறுப்பினர்கள் 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரதிநிதிகள் வராத வட்டங்களான திருவாடானை, திருப்பத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் ஆகிய நான்கு வட்டங்களிலிருந்து 8 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

### தீர்மானங்கள்

1. இராமநாதபுர மாவட்டச் செயற்குழு கூடும்போது 9 பேர் கூடினால் கூட்டத்துக்கு (கோரம்) என்று கருதப்படும்.

2. செயற்குழுவினர் கலந்து பேசி, செயற் குழு வயது மாதம் குழுவினர் பதிமன் கூட்டங்களுக்கு கூட்டம் கூட்டி நடைமுறை செயலாளர் கூட்டிக்க வேண்டும்.

3 மறைந்த தலைவர் பட்டுக்

### முத்தியாலுப் பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகம்

---

### காஞ்சி மணிமொழியார் திருக்குறள் பரிசுப் போட்டி

---

பரிசு பெற்றோர் விவரம்

சென்னை, ஜன. 8—

இன்று காலை 10-மணிக்கு இக்கழகத்தின் ஆதரவில் காஞ்சி மணிமொழியார் "திருக்குறள் பரிசுப் போட்டி" மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருக்குறள் பேச்சுப் போட்டி, மனப்பாடப் போட்டி ஆகிய இரண்டு போட்டிக்கும் பல கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப்பள்ளி, தமிழ்க் கழக மாணவர்கள் பெருவாரியாக பங்கெடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். பேச்சுப் போட்டிக்குத் தோழர்கள் காஞ்சி மணிமொழியார், பி. வீராசாமி, புலவர் கி. சண்முகம் ஆகியோரும், மனப்பாட போட்டிக்குத் தோழர்கள் புலவர் பெ. அண்ணாமலை, ஆசிரியர் ஆர். நரசிம்மன் ஆகியோரும் நீதிபதிகளாக அமைந்திருந்தனர். பேச்சாளர் ஒவ்வொருவரும் குறள் மணம் கமழ, ஆர்வமும் அழகும் நிறைந்தசொற்பொழிவால் வந்திருந்த மக்கள் யாவரையும் களிப்புறச்செய்தனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி காஞ்சி மணிமொழியார் பேசினர்.

### பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

முதற்பரிசு:- வி. டி. கோபால கிருஷ்ணன், 4ம் படிவம், திருவொற்றியூர் இலவச உயர்நிலைப் பள்ளி, சென்னை.

இரண்டாவது பரிசு:-தோழியர் ஆனந்தநாயகி, பி. ஏ. வகுப்பு, சென்னை மாகாணக் கல்லூரி.

சிறப்புப் பரிசுகள்: (1) கோ. தெய்வசிகாமணி, வில்லிவாக்கம், (2) தி. ர. பழனி, முத்தியாலுப் பேட்டை. (இவ்விரண்டு சிறப்புப் பரிசுகளும் கழகத் துணைத்தலைவர் தோழர் கோ. முத்து. பி. ஏ. அவர்களால் வழங்கப்படுகிறது).

சிறப்பிதழ்கள்:- வி. எம். அரங்கநாதன், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி எழும்பூர். (2) ந. ஆறுமுகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை (3) எம். டி. கோபால் ரத்தினம், திருவொற்றியூர் இலவச உயர்நிலைப்பள்ளி, சென்னை.

### மனப் பாடப் போட்டியில் வெற்றிபெற்றோர்

முதற்பரிசு.— டி. எஸ். பழனி, ஏ. ஆர். சி. ஆரம்பப்பள்ளி, முத்தியாலுப்பேட்டை

இரண்டாவது பரிசு:— தி. ச. அரச்சனன், திருவொற்றியூர் இலவச உயர்நிலைப்பள்ளி.

சிறப்புப்பரிசுகள்:— ஆர். குமாரசாமி (2) எம். துளசிங்கம் (இவ்விரண்டு பரிசுகளும் கழக செயற்குழு அங்கத்தினர் தோழர் கோ. குமாரசாமி அவர்களால் வழங்கப்படுகிறது)

சிறப்பிதழ்-எ. ஜி. வரதாச்சாரி ஆர். ராஜமாணிக்கம், தாண்டவமூர்த்தி.

தோழர்கள் கோ. முத்து, கோ. குமாரசாமி நன்றி கூற முறையே திருக்குறள் பேச்சுப் போட்டிக் கூட்டமும், மனப்பாடப்போட்டிக் கூட்டமும் இனிது முடிந்தன.

---

கோட்டை அழகிரிசாமி அவர்கள், [illegible] வெளிவந்த [illegible] சிதம்பரனுர் அவர்கள், இக்கூட்டம் இ[illegible] வருடன் [illegible] நிதியில் இருக்கும் அன்னூர் தம் ஜே மக்கட்கு ஆறுதல் கூறுகிறது.

